2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தனியார் பள்ளியில் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வின்போது நடைபெற்ற முறைகேடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் பொட்டல் என்ற கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகின்றது. அந்தப் பள்ளியில் 44 மாணவர்கள் பத்தாம் வகுப்பு பயின்று வருகின்றார்கள். அந்தப் பள்ளியினுடைய தலைமையாசிரியர், மாணவர்கள் நூற்றுக்கு நூறு பெற வேண்டுமென்ற அடிப்படையி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள் என்னிடம் கொடுத்த பிரச்சினையை விட்டுவிடுங்கள். அந்த முன்னறிவிப்பு துறைக்குப் போய் இருக்கிறது. அது வரட்டும். நீங்கள் திருவண்ணாமலை மாவட்டம் பற்றி என்னிடம் காலையில் சொன்னீர்கள். அதைப் பற்றி மட்டும் பேசுங்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், ஒரு தனியார் பள்ளியில் பத்தாம் வகுப்புத் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்தில், அங்கு மாணவர்கள் தேர்வு எழுதிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், மாணவர்கள் நூற்றுக்கு நூறு விழுக்காடு தேர்ச்சி பெற வேண்டுமென்ற அடிப்படையில், பள்ளி நிர்வாகமும் அங்கு பணிபுரியும் ஆசிரியர் பெருமக்களும் இணைந்து கேள்விக்கான பதிலை ஜெராக்ஸ் எடுத்து, மாணவர்களுக்கு விநியோகித்திருக்கின்றார்கள். கல்வித் துறைக்கே களங்கம் ஏற்படுத்துகின்ற விதமாக, மாணவர்கள் காப்பி அடிப்பதை அந்தப் பள்ளி நிர்வாகமே ஊக்குவித்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அந்தப் பள்ளிக்கு நேரில் சென்று, பார்வையிட்டு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார். நான், இதில் வலியுறுத்த விரும்பும் ஒரு கருத்து என்னவென்றால், தொடர்ந்து அந்தத் தனியார் பள்ளியின்மீது பல ஆண்டுக்காலமாக*

[திரு. சு. குணசேகரன்] [2012 ஏப்ரல் 17

இப்படிப்பட்ட புகார்கள் இருந்தும், அந்தப் பள்ளி தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கின்றது. எனவே, நமது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இப்படி ஒழுங்கீனமாக மாணவர்களை நடத்தி, அதன் மூலமாகத் தங்களுடைய பள்ளியின் வளர்ச்சிக்காகச் செயல்படக்கூடிய, அந்தத் தனியார் பள்ளியின் நிர்வாகிகள்மீது முழுமையான நடவடிக்கைகளை எடுத்து, அந்தப் பள்ளியினுடைய அங்கீகாரத்தை இரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஒரு தனியார் பள்ளியில் நெஞ்சைப் பதற வைக்கும் வகையில், கேள்வித் தாளின் பதிலை ஜெராக்ஸ் எடுத்து மாணவர்களுக்கு வழங்கியிருகின்றார்கள். இது மக்கள் மத்தியில் மிகப் பெரிய ** அதேநேரத்தில், இதற்கு அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்களா அல்லது அரசுக்கு வேண்டுமென்றே களங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நினைக்கின்றார்களா என்ற அச்சமெல்லாம் . . .

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. கலை அரசு, பிட் அடிப்பதால் மக்கள் மத்தியில் ** ஏற்பட்டிருக்கிறது என்றால் எப்படி? எதற்கு ** ஆவது என்பது இல்லையா? ** எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது.

திரு. ம. கலை அரசு: நீங்களும் ஒரு பெற்றோராக இருக்கிறீர்கள். கஷ்டம் என்னவென்று உங்களுக்கும் தெரியும். ஆகையினால், கண்டிப்பாக மக்கள் மத்தியில் ** இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'அச்சம்' என்று வேண்டுமானால் சொல்லுங்கள். ** என்று சொல்லி நீங்களே **. விஷயத்தை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2012 ஏப்ரல் 17]

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வேண்டுமென்றே களங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அதிகாரிகள் செயல்படுகிறார்களா அல்லது அரசாங்கம் இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறதா என்கின்ற வகையில் அரசினுடைய கவனத்தை இதில் ஈர்க்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இதுபோன்று பல்லாயிரக்கணக்கான தனியார் பள்ளிக்கூடங்கள், கல்விச் சாலைகள் என்பதற்குப் பதிலாக கல்வித் தொழிற்சாலைகள் என்பதுபோல் நடந்து கொண்டிருக்கின்றன. இது கடுமையான விளைவை நம்முடைய மாணவர்கள் மத்தியில், எதிர்காலச் சந்ததியினர் மத்தியில் உண்டாக்கும். அதுபோன்ற பள்ளிகளில் பணம் கொடுத்துப் படிக்க இயலாதவர்கள், அவர்களோடு போட்டியிட முடியாத நிலைமையை இது ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தனியார் பள்ளிக்கூடங்கள் அனைத்திலும் ஒரு விரிவான சோதனையை அரசாங்கமே, தானே முன்வந்து எடுத்து, எல்லாவற்றையும் சீர்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அதுபற்றி அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள். (குறுக்கீடு) கட்சிக்கு ஒருவர்தான், அவர் பேசிவிட்டார்; உட்காருங்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் உள்ள ஒரு தனியார் பள்ளியில், வேலியே பயிரை மேய்ந்தது என்று சொல்வதைப்போல, அந்த நிர்வாகமும், பள்ளி ஆசிரியர்களுமே ஏறக்குறைய 40–க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குக் காப்பி அடிப்பதற்கு உதவியிருக்கிறார்கள் என்ற செய்தி வருகிறது. இது ஒரு தனியார் பள்ளியில் மட்டும் நடக்கக்கூடிய சம்பவம் அல்ல. பல நேரங்களிலே, பல தனியார் பள்ளிகளிலே அரசினுடைய கவனத்திற்கு வராமலேயே இதுபோன்ற சம்பவங்கள் நடந்து வருகின்றன. இது சமூகத்திற்கு ஏற்படக்கூடிய அவமானமும்,

இழுக்கும் ஆகும். இதுபோன்ற சம்பவங்களை அரசு அனுமதிக்கக்கூடாது. எனவே, இதுகுறித்து தமிழக அரசு உரிய நடவடிக்கையை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 4–4–2012 முதல் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் நடைபெற்று வருகின்றன. மாநிலம் முழுவதுமாக 3,032 தேர்வு மையங்கள் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக்காக அடையாளம் காணப்பட்டு தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தேர்வுகளை நல்ல முறையில் நடத்துவதற்கு ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் குறைந்தபட்சம் 50 பறக்கும் படையினர் என்ற அளவில் தேவைக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளனர். தற்போது 3,300 பறக்கும் படையினர் மாநிலம் முழுவதும் நடக்கும் இத்தேர்வினைக் கண்காணித்து வருகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்வுக் குழுவின் தலைவர் ஆவார்கள். திருவண்ணாமலை கல்வி மாவட்டத்தில் மட்டும் 70 தேர்வு மையங்களும், 78 பறக்கும் படையினரும் நடந்துவரும் பொதுத் தேர்வினைக் கண்காணித்து வருகின்றனர். திருவண்ணாமலை மவுண்ட் செயின்ட் ஜோசப் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி— இது தனியார் பள்ளி—10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு 4–4–2012 முதல் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தத் தேர்வு மையத்தில் 763 மாணவ, மாணவிகள் தேர்வு எழுதி வருகின்றனர். அதில் அப்பள்ளியைச் சேர்ந்தவர்கள் மட்டும் 284 மாணவ, மாணவியர்கள்; 63 மாணவர்கள் துர்க்கைநம்பி அந்தல் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்தவர்கள், 11 மாணவர்கள் அக்ஷயா வித்யா மந்திர், ஆசூர் பள்ளியைச் சேர்ந்தவர்கள். மொத்தம் 405 தனியார் பள்ளி மாணவர்கள் அந்தப் பள்ளியில் தேர்வு மேற்கொண்டு வந்தனர்.*

நேற்று, 16–4–2012 அன்று காலை 10 ஆம் வகுப்பு கணிதம் பொதுத் தேர்வு நடக்கும்போது, பறக்கும் படையினரின் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட ஆட்சித்

தலைவருக்கும் இ–மெயில் மூலமாக இதுகுறித்து ஒரு பெற்றோரால் தகவல் அனுப்பப்பட்டது. தகவல் பெற்றவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த் துறை அதிகாரிகளை அழைத்துக் கொண்டு, ஒரு கண்காணிப்புக் குழுவை அமைத்து, நேற்று அவருடைய தலைமையில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்தக் குழுவின் கண்காணிப்பின்போது, அப்பள்ளியில் சில முறைகேடுகள் நடப்பது கண்டறியப்பட்டது. தேர்வு எழுதும் பள்ளியைச் சேர்ந்த மாணவர்களுக்கு விடைகள் ஜெராக்ஸ் நகல்மூலம் கொடுக்கப்பட்டது கண்டறியப்பட்டது. தேர்வு மைய மேற்பார்வையாளர்கள் 7 பேர் இதற்கு உடந்தையாக இருந்து செயல்பட்டு வந்தது தெரிய வந்தது. இந்தச் செய்தி நேற்றையதினமே அரசின் கவனத்திற்கு வந்தது. வந்தவுடனேயே அரசு, அப்பள்ளியில் பணிபுரிந்த 7 நபர்கள்மீது நடவடிக்கை எடுத்து, தற்போது தற்காலிக பணிநீக்கம் செய்து நேற்றே உத்தரவு வழங்கியுள்ளது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–30

ஏற்கெனவே இங்கே பேசிய 3 மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோன்று நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அப்பள்ளியின்மீது மேலும் நடவடிக்கை எடுக்கலாமா என்று அரசு இப்போது யோசித்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் தமிழ்நாட்டில் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த முறை அதிகமாக பறக்கும் படைகள் அமைத்து இப்போது தேர்வுகளைக் கண்காணித்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, பள்ளிக் கல்வித் துறையில் கிட்டத்தட்ட ஒரு கோடியே 33 இலட்சம் மாணவர்கள் இப்போது தேர்வினை எழுதுகிறார்கள், இதில் ஆசிரியர்கள் 5½ இலட்சம் பேர் பணிபுரிகிறார்கள். ஒரு சில ஆசிரியர்கள் செய்கின்ற தவறுகளை அரசு உடனடியாகக் கண்டுகொண்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்போது இந்தத் தவறில் ஈடுபட்ட 7 நபர்கள்மீது உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து தற்காலிக பணி நீக்கம் செய்து உத்தரவு வழங்கியிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கின்றேன். (குறுக்கீடு)